**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
# IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF UTHUKULI

| | | |
|---|---|---|
| Case No. | : | STC 5/2020 |
| Deposition of Witness | : | PW-1 |
| Name | : | லோகநாதன் |
| Father Name | : | அவினாசிகவுண்டர் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 57 |
| Occupation | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 18.04.2023.

## முன் விசாரணை

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டம், செங்கப்பள்ளி அஞ்சல் பொன்னாபுரத்தில் கதவு எண் 68 ல் வசிக்கும் அவினாசிகவுண்டர் மகன் சுமார் 57 வயதுடைய லோகநாதன் என்னும் நான் புகார்தாரர் கருப்புசாமியின் பொது அதிகாரம் பெற்ற நபர் என்ற வகையில் சாட்சியம் அளிக்கிறேன். நான் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 08.02.2016 ம் தேதியிட்ட பேங்க் ஆப் பரோடா ஊத்துக்குளி கிளையின் காசோலை எண் 635362 அசல் **பு.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 10.02.2016 ம் தேதியிட்ட வங்கி திருப்புதல் குறிப்பாணை அசல் **பு.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.02.2016 ம் தேதியிட்ட எதிரிக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **பு.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பிணை அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் **பு.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பிணை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் **பு.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.02.2016 ம் தேதியிட்ட எதிரியின் பதில் அறிவிப்பு அசல் **பு.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

__குறுக்கு விசாரணை__

போதிய வாய்ப்பளித்தும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**நீதிமன்ற கேள்வி** : புகார்தாரர் கருப்புசாமிக்கும் எதிரி கலாமணிக்கும் இடையே நடந்த பணபரிவர்த்தனை பற்றி உங்களுக்கு எப்படி தெரியும் ?

**பதில்** : அருகில் இருந்தோர் பேசிக்கொண்டதன் மூலம் தெரிந்துகொண்டேன்.

**நீதிமன்ற கேள்வி** : கலாமணி கருப்புசாமிக்கு காசோலை கொடுத்த விபரம் உங்களுக்கு எப்படி தெரியும் ?

**பதில்** : நான் அதை நேரில் பார்த்தேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையில் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.